விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆனி - 05 சனி 19.06.2021 மலர் - 2, இதழ் - 74

# நீட் கமிட்டியில் தேவை நடுநிலையாளர்கள்

'நீட்' நுழைவுத் தேர்வின் பாதிப்பு குறித்து ஆய்வு செய்வதற்கு ஓய்வு பெற்ற நீதிபதி ராஜன் தலைமையில் கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில், அரசு அதிகாரிகள் தவிர உறுப்பினர்களான இரண்டு பேரும் 'நீட்' தேர்வு எதிர்ப்பாளர்கள் என கூறப்படுவதால் நடுநிலையாளர்களை நியமிக்க கோரிக்கை எழுந்துள்ளது. இதுகுறித்து கருத்துத் தெரிவித்த அண்ணா பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பாலகுருசாமி, 'மருத்துவ படிப்புக்கான 'நீட்' தேர்வை எதிர்க்கும் ஒரே மாநிலம் தமிழகம் மட்டுமே. இது வினோதமான நிலைப்பாடு. தமிழக மாணவர்கள் திறமையானவர்கள் அவர்களுக்கு சிறந்த கல்வியை அளித்தால் அனைத்து நுழைவு தேர்வுகளிலும் முன்னிலை பெறுவர். எனவே தமிழகத்தில் அரசு பள்ளிகளின் கற்பித்தல் தரத்தை உயர்த்த முனைய வேண்டும். அதற்கு கமிட்டி அமைக்க வேண்டும். மாறாக நீட் தேர்வு கமிட்டி அமைத்திருப்பது கண் துடைப்பு. கமிட்டியின் முதல் கூட்டத்திலேயே கமிட்டியின் தலைவர் 'நீட் தேர்வால் பாதிப்பு உள்ளது' என கூறியுள்ளார். அரசின் நிலைப்பாடும் அதுவே. கமிட்டியில் நீட் எதிர்ப்பாளர்கள், அரசின் செயலர்கள் மட்டுமே உள்ளனர். அதில், நடுநிலையான மாணவர் நலன் பேணும் கல்வியாளர்கள் இடம் பெற வேண்டும். நீட் தேர்வை கட்டாயம் நடத்த வேண்டும் என உச்ச நீதிமன்றம் கூறி விட்டது. கமிட்டியின் பரிந்துரையால் ஒன்றும் நடக்காது' என கூறியுள்ளார்.






# நீட் கருத்து தெரிவிக்க அழைப்பு

'நீட்' தேர்வு குறித்து பொது மக்கள் தங்களின் கருத்துகளை நீதிபதி ஏ.கே.ராஜன் குழுவிடம் தெரிவிக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, நீட் தேர்வு வாயிலாக மருத்துவ சேர்க்கையில் மாணவர்களுக்கான சாதகங்கள், பாதிப்புகள் குறித்து பொது மக்கள் தங்களின் கருத்துகளை ஐந்து பக்கங்களுக்கு மிகாமல் தபால் அல்லது neetimpact2021@gmail.com என்ற மின்னஞ்சல் அல்லது நேரடியாக மருத்துவ கல்வி இயக்ககத்தில் வைக்கப்பட்டுள்ள தனிப்பெட்டியில் வரும் 23ம் தேதிக்குள் சமர்ப்பிக்கலாம் கூறப்பட்டுள்ளது.

# கோயில்கள் திறப்பு இப்போதைக்கு இல்லை



மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் ஆய்வு பணிகளை மேற்கொண்ட, தமிழக ஹிந்து அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு, நிருபர்களிடம் பேசுகையில், 'தமிழகத்தில் கொரோனா தாக்கம் முற்றிலும் இல்லை என்ற நிலை எப்போது வருகிறதோ அப்போது அனைத்து கோயில்களும் திறக்கப்பட்டு, பொது மக்களுக்கு அனுமதி வழங்கப்படும். கோயில்களில் பக்தர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படவில்லை. மற்றபடி அனைத்து பூஜைகளும் தடையின்றி நடைபெற்று வருகிறது. பாதுகாப்பற்ற நிலை ஏற்படும் என்ற காரணத்தினால், கோயில் நகை பற்றிய விவரங்களை இணையதளத்தில் வெளியிட முடியாது. தீவிபத்தினால் சேதமடைந்த வீரவசந்தராயர் மண்டபம் விரைவில் புனரமைக்கப்படும். அடுத்தாண்டு மீனாட்சி கோயில் கும்பாபிஷேக பணிகளை நடத்த நடவடிக்கை எடுக்கப்படும். கோயில் சொத்துக்களை அபகரித்தவர் யாராக இருந்தாலும் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்' என கூறினார்.

# முதலிடம் பிடித்த மோடி

அமெரிக்கன் டேட்டா இன்டெலிஜென்ஸ் நிறுவனமான மார்னிங் கன்சல்ட், உலகத் தலைவர்களில் திறமை வாய்ந்தவர்கள் பட்டியலை வெளியிட்டது. அதில், பிரதமர் மோடி 66 சதவீத ஆதரவுடன் உலகத் தலைவர்களில் முதலிடத்தில் உள்ளார். அடுத்ததாக 65 சதவீத ஆதரவுடன் இத்தாலி பிரதமர் மரியோ டிராகி 2வது இடத்திலும், 63 சதவீத ஆதரவுடன் மெக்சிகோ அதிபர் லோபஸ் ஆப்ரேடர் 3வது இடத்திலும் உள்ளனர். அமெரிக்க அதிபர் ஜோ பைடன் 53 சதவீதத்துடன் 6ம் இடத்தில் உள்ளார். கொரோனா தொற்றுக் காலத்தில் மோடியின் செல்வாக்கு சரிந்துவிட்டதாக எதிர்கட்சிகள் அனைத்தும் அவதூறு பிரச்சாரம் செய்த நிலையிலும் கருத்துக் கணிப்புகளில் அவர் முதலிடத்தை பிடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# பி.எப். பணத்தில் கையாடல் செய்த பிஷப்

கோவை சி.எஸ்.ஐ., திருமண்டல கட்டுப்பாட்டிலுள்ள சர்ச்சுகளில் பணியாற்றும் பாதிரிகள், ஊழியர்களின் சம்பளத்தில் பிடித்தம் செய்த வருங்கால வைப்பு நிதியில், 25 கோடி ரூபாயை மோசடி செய்யப்பட்டதாக, பாதிரி ஜெரோம் ஜேக்கப்பால் புகார் அளிக்கப்பட்டது. இது தொடர்பாக, பிஷப் திமோத்தி ரவீந்தர், ஆலோசகர் டேவிட் மங்கள் தாஸ், செல்வகுமார், முன்னாள் செயலாளர் சார்லஸ் சாம்ராஜ் ஆகியோர் மீது குற்றப்பிரிவு காவல்துறையினர் வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர். முன்ஜாமின் கோரி, மாவட்ட செஷன்ஸ் கோர்ட்டில், நான்கு பேரும் மனு தாக்கல் செய்தனர். மனுவை விசாரித்த நீதிபதி, ஜாமீன் மனு மீதான விசாரணையை, ஜூலை 9க்கு தள்ளிவைத்தார். அதுவரை, நான்கு பேரையும் கைது செய்யகூடாது என்றும் உத்தரவிட்டார்.




# இலவச தடுப்பூசி




முன்கள பணியாளர்களுக்கு திருத்தியமைக்கப்பட்ட திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கும் திட்டத்தை வீடியோ கான்பரன்சிங் முறையில் துவக்கி வைத்த பிரதமர் மோடி, 'நாடு முழுவதும், ஒரு லட்சம் முன்களப் பணியாளர்களை தயார்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளோம். அதற்கான பாட திட்டத்தை நிபுணர்கள் வடிவமைத்து உள்ளனர். இப்பணி 2 அல்லது 3 மாதங்களில் நிறைவு பெறும். அவர்களுக்கு கொரோனாவை எதிர்த்து போராட முறையான பயிற்சி அளிக்கப்படும். அனைத்து மாவட்டங்களிலும் 1,500 ஆக்ஸிஜன் உற்பத்தி மையங்களை போர்க்கால அடிப்படையில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அனைவருக்கும் இலவசமாக தடுப்பூசி வழங்க மத்திய அரசு உறுதி பூண்டுள்ளது' என தெரிவித்தார்.

# உருமாறிய கொரோனாவை எதிர்க்கும் 2டிஜி

பாரதத்தில், ஐதராபாத்தில் உள்ள டாக்டர் ரெட்டீஸ் லெபாரட்டரீஸ் உடன் இணைந்து பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பான டி.ஆர்.டி.ஓ உருவாக்கிய கொரோனாவிற்கான மருந்தான 2டியோக்ஸிடிகுளுக்கோஸ் (2டிஜி), உருமாறிய கொரோனா வைரஸ்களுக்கு எதிராக செயல் திறன் மிக்கதா என ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதில், கொரோனாவின் அனைத்து வகை உருமாறிய வகைகளுக்கு எதிராகவும் இம்மருந்து சிறப்பாக செயல்படுகிறது என முதல்கட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது. எனினும் இந்த ஆய்வு இன்னும் மறுஆய்வு செய்யப்படவில்லை என்று ஏ.என்.ஐ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.



# விவசாய போராளிகளின் அட்டூழியங்கள்

டெல்லி ஹரியானாவின் எல்லையான திக்ரியில் முகாமிட்டு விவசாய சட்டங்களுக்கு எதிராக பல மாதங்களாக கமிஷன் ஏஜெண்டுகளும், அவர்கள் அடிபொடிகளும் போராடி வருகின்றனர். சில நாட்களுக்கு முன் அதில் ஒரு குழுவினர் தங்கள் சக ஆர்ப்பாட்டக்காரரான முகேஷ் என்பவரை உயிரோடு தீ வைத்து எரித்துள்ளனர். அதனை படம் எடுத்து அவரை போராட்டத் தியாகியாக சித்தரிக்கவும் முனைந்தனர். ஆனால், விசாரணையில், அவர் சக ஆர்பாட்டக்காரர்களுடன் இணைந்து போதை பொருட்களை உட்கொண்டதும், அப்போது ஏற்பட்ட சண்டையில், அவரை ஜாதியின் பெயரை சொல்லி திட்டியதுடன் அவருக்கு அக்குழுவினரே தீ வைத்து எரித்ததும் தெரியவந்தது. இதேபோல, கடந்த ஏப்ரலில் காசர் கிராமத்தில் குர்பிரீத் சிங் என்ற ஒரு போராட்டக்காரர் கொல்லப்பட்டார்.



மார்ச் 25ல் ஹக்காம் சிங் என்ற விவசாயி, சக போராட்டக்காரர்களால் கழுத்தறுத்துக் கொல்லப்பட்டார். பல பாலியல் துஷ்பிரயோகங்களும் நடைபெற்றுள்ளன.



# டுவிட்டர் பங்குகள் சரிவு

புதிய தகவல் தொழில்நுட்ப விதிகள் தொடர்பாக பாரத அரசுடன் ஏற்பட்ட மோதல் போக்கை அடுத்து டுவிட்டர் நிறுவனம் நிதி ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளது. நியூயார்க் ஸ்டாக் எக்ஸ்சேஞ்சில் (NYSE) டுவிட்டரின் பங்குகளின் மதிப்பு 25 சதவீதம் குறைந்துள்ளது. முன்னதாக, புதிய தகவல் தொழில்நுட்ப விதிகளுக்கு இணங்க மத்திய அரசு அளித்த இறுதி அறிவிப்பை டுவிட்டர் செயல்படுத்தாததால் இடைநிலையாளர் தகுதியையும் சட்டப் பாதுகாப்பையும் இழந்துவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# திப்பு சுல்தான் சிலைக்கு கண்டனம்



ஆந்திராவின் கடப்பா மாவட்டத்தில் உள்ள புரொடுதுரு நகரில்அப்பகுதியின் சட்டமன்ற உறுப்பினரும் உள்ளூர் முஸ்லிம்களும் இணைந்து திப்பு சுல்தானின் சிலையை அமைக்க முயற்சி மேற்கொண்டு வருகின்றனர். இதனை, அங்குள்ள பா.ஜ.கவினரும் ஹிந்துக்களும் எதிர்க்கின்றனர். இது குறித்து அறிக்கை வெளியிட்டுள்ள ஆந்திர மாநில பா.ஜ.க தலைவர் சோமு வீர்ராஜு, ‘ஏராளமான ஹிந்துக்களைக் கொன்ற திப்புவின் சிலையை அமைப்பது அங்குள்ள ஹிந்துக்களின் உணர்வுகளை புண்படுத்தும் செயல். இது அப்பகுதியில் நிலவும் வகுப்புவாத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும். முன்னாள் ஜனாதிபதி ஏ.பி.ஜே. அப்துல் கலாமைவிட திப்பு சுல்தான் பெரியவர் அல்ல. எனவே, திப்பு சுல்தானின் சிலைக்கு பதிலாக, அப்துல் கலாமின் சிலை அமைக்கப்பட வேண்டும்’ என என கோரியுள்ளார்.

# நாங்கள் சான்றளிக்கப்பட்ட குண்டர்கள்

மகாராஷ்டிரா, மும்பையில் சேனா பவனுக்கு வெளியே அயோத்தி குறித்து சிவசேனாவின் சாம்னாவில் வந்த செய்தி குறித்த பிரச்சனையில் சிவசேனாவுக்கும் பா.ஜ.கவினருக்கும் இடையே ஒரு மோதல் ஏற்பட்டது. இதனையடுத்து சிவசேனா தலைவர் சஞ்சய் ரவுத் செய்தியாளர்களிடம் பேசுகையில், "குண்டர்கள் என்பதற்கு யாரும் எங்களுக்கு ஒரு சான்றிதழ் அளிக்கத் தேவையில்லை, நாங்கள் சான்றிதழ் பெற்ற குண்டர்கள்" என்று பெருமையாக கூறினார். அவரின் இப்பேச்சு அங்கு சர்ச்சையை ஏற்படுத்தியது.



இது குறித்து துணை முதல்வர் அஜித் பவார் கூறுகையில், 'எந்தக் கட்சியும் குண்டர்களைப் போல நடந்து கொள்ள அனுமதிக்க முடியாது. அனைவரும் சட்டத்தின்படிதான் நடந்துக்கொள்ள வேண்டும்' கூறினார்.

# திரிணமூல் கட்சியின் பழிவாங்கல்

மேற்கு வங்கத்தில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியினர் தினமும் அம்மாநில மக்களுக்கு எதிராக அரங்கேற்றும் அட்டூழியங்களுக்குக் அளவே இல்லை. அவ்வகையில், கடந்த 2015ல் அம்மாநில முதல்வர் மமதா பானர்ஜியின் மருமகனான அபிஷேக் பானர்ஜியை ஒரு அரசியல் கட்சி நிகழ்ச்சியில் அறைந்த தேவசிஷ் ஆச்சார்யா என்பவர், இரு தினங்களுக்கு முன், மர்மமான முறையில் பலத்த காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இறந்தார். அவரது குடும்பத்தினர் அதனை கொலை என்று குற்றம் சாட்டுகின்றனர். 2015ல் அச்சம்பவம் நடைபெற்றதையடுத்து அங்கேயே அவரை திருணமூல் கட்சி குண்டர்கள் மிகக் கொடூரமாக தாக்கினர். பின்னர் அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உயிர் பிழைத்தார். கடந்த 2020ல் தேவசிஷ் ஆச்சார்யா பா.ஜ.கவில் இணைந்தார். இதனால் இது திருணமூல் கட்சியின் பழிவாங்கல் நடவடிக்கையாகவே மக்களால் கருதப்படுகிறது.





# கட்சிகளின் கொரோனா விதிமீறல்

கேரள மாநிலம், திருவனந்தபுரத்தில் கேரளகாங்கிரஸ்தலைவராககே.சுதாகரனை தேர்ந்தெடுக்க இந்திரா பவனில் நடைபெற்ற விழாவில், கொரோனா நடத்தை விதிமுறைகளை மீறி, 1,500 க்கும் மேற்பட்ட காங்கிரஸ் கட்சித் தொண்டர்கள் கூடினர். 350 இருக்கைகள் கொண்ட மண்டபத்திற்குள் 500 பேர் நுழைந்தனர். ஆயிரக்கணக்கானோர் வெளியே கூடி இருந்தனர். முன்னாள் முதல்வர் உம்மன் சாண்டி, ரமேஷ் சென்னிதலா உட்பட பல தலைவர்களும் சரியாக முகக்கவசம் அணியாமல் காணப்பட்டனர். இதற்கு அனுமதித்த கேரள கம்யூனிச அரசுக்கு எதிராக புகார்கள் எழுந்தன. எனவே, வேறு வழியின்றி கேரள காவல்துறை தொற்றுநோய்கள் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்துள்ளது. அதில் ஒரு சில மூன்றாம் கட்டத் தலைவர்களின் பெயர்கள் இடம் பெற்றதே தவிர, முக்கியத் தலைவர்களின் பெயர்கள் இடம்பெறவில்லை. முன்னதாக, பா.ஜ.கவின் உயர்மட்டக் கமிட்டி கூட்டத்தை நடத்த கொரோனாவை காரணம் காட்டி கேரள அரசு அனுமதி அளிக்க மறுத்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## முகுல் ராய் ராஜினாமா செய்ய மறுப்பு




மேற்கு வங்கத்தில், திருணமூல் கட்சியில் இருந்து விலகி பா.ஜ.கவில் இணைந்தவர் முகுல் ராய். இவர் பா.ஜ.க சார்பாக வடக்கு கிருஷ்ணா நகர் தொகுதியில், தேர்தலில் போட்டியிட்டு சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். மீண்டும் திருணமூல் கட்சியில் இணைந்த அவர் தனது பா.ஜ.க சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்ய மறுத்துவிட்டார். இதனால் அவர் மீது கட்சித்தாவல் தடைச்சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க சபாநாயகரிடம் புகார் அளிக்க உள்ளதாக பா.ஜ.க சட்டசபைத் தலைவர் சுவேந்து அதிகாரி தெரிவித்துள்ளார்.

## தடுப்பூசி சாதனை



பாரதத்தில் போடப்பட்டுள்ள கொரோனா தடுப்பூசிகளின் எண்ணிக்கை 27 கோடியை நெருங்குகிறது. இதனால், உலகிலேயே விரைவாகவும் அதிக எண்ணிக்கையிலும் தடுப்பூசி செலுத்தும் நாடாக பாரதம் திகழ்கிறது.

## இடதுசாரி பத்திரிகையாளர் மீது புகார்



தி வயர்', 'கேரவன்' போன்ற இடதுசாரி சார்பு ஊடகங்களுடன் தொடர்புடையவர் பத்திரிகையாளர் நேஹா தீட்சித். இவர் தனது டுவிட்டர் பதிவில், ஆர்.எஸ்.எசின் துணை அமைப்பான சேவா இன்டர்நேஷனல் அமைப்புக்கு வெளிநாட்டினர் உட்பட யாரும் நிதியளிக்க வேண்டாம். அவர்கள் 'குழந்தை கடத்தலில் ஈடுபட்டனர் என பொய்யாக குற்றம் சாட்டினார். இதனையடுத்து பத்திரிகையாளர் நேஹா தீட்சித் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இது விரைவில் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவர் முன்னதாக, 2016ல் 'தி அவுட்லுக்' என்ற பத்திரிகையிலும் ஆர்.எஸ்.எஸ் குறித்து தவறாக எழுதியுள்ளார். உ.பி. ம.பி உட்பட பா.ஜ.க ஆளும் மாநிலங்களில் கொரோனா கட்டுப்படுத்துதல் குறித்தும் கருத்து சுதந்திரம் என்ற பெயரில் பல்வேறு தவறான குற்றச்சாட்டுகளை சுமத்துவதை வாடிக்கையாகவே வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ட்ரோனில் ஆயுதங்கள் கடத்தும் பாகிஸ்தான்



காஷ்மீர் எல்லைப் பகுதிகளில் ஆயுதங்களையும் போதைப் பொருட்களையும் கடத்த சமீப காலமாக பாகிஸ்தான், ட்ரோன்களை பயன்படுத்தி வருகிறது. கடந்த மே 14ல், ஒரு ஏ.கே 47 துப்பாக்கி, 9 மி.மீ கைத்துப்பாக்கி, 15 குண்டுகள் உள்ளிட்ட ஆயுதங்கள் ட்ரோன் மூலம் கடத்தப்பட்டது. எல்லை பாதுகாப்புப் படை வீரர்கள் அதனை சுட்டு வீழ்த்தி கைப்பற்றினர். சுமார் ஒரு மாதம் கழித்து நேற்று மீண்டும் இதே போன்றதொரு முயற்சி நடைபெற்றுள்ளது. எல்லைப் பாதுகாப்புப் படையினர் அந்த ட்ரோனை சுட்டு வீழ்த்த முயன்றபோது அது பாகிஸ்தான் பகுதிக்கே மீண்டும் திரும்ப சென்றது. இதனையடுத்து, அப்பகுதியில் பாதுகாப்புப் படையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.



# மென்மையான பயணம்

'**சா**ண்டரிங்' என்பது மெதுவாகவும் நிதானமாகவும் நடந்து செல்வதைக் குறிக்கும். நமது பரபரப்பான வாழ்க்கையில் எதிலும் நிதானம் என்பதே இல்லை. 'அவசரம் ஆபத்து' என்பதை உணர்ந்த பின்பும் நிதானம் ஏனோ நமக்கு வருவதே இல்லை. பதறாத காரியம் சிதறாது, என்பது அனைவரும் அறிந்ததே! அப்படி மெதுவாக நடைபோட ஒரு வாய்ப்பை தரும் தினம் இது.

நம்மைச் சுற்றியுள்ள பரபரப்பான உலகத்தில், அதன் தாக்கங்கள் அனைத்தையும் விடுத்து சற்று வெளியே சென்று, ஆழ்ந்த அமைதி, நிதானமான காற்று, தூய்மையான தெளிவு, மகிழ்ச்சியின் ஒரு கணம் ஆகியவற்றை அனுபவிப்பதற்கான வாய்ப்பு இது.

மனதிற்கு இன்பம் தரும் இசையோடு மெல்ல நடந்து தூரங்களை கடப்போம். கால்கள் தரையோடு உறவாட, கைகள் காற்றோடு கதை பேச, மெல்ல நடைபோட்டு மகிழ்வோம். அசைந்தாடும் ஆச்சரியங்களை அழகாய் ரசித்திடுவோம். ஊதும் குழலிசை, கூவும் குயிலிசை, தென்றலின் மெல்லிசை அனைத்தையும் அனுபவித்து பேரின்பம் கொள்வோம். நிதானமாக ஒரு நடைபோட்டு நிகழும் காட்சிகளை மெய்யால் உணர்ந்திடுவோம்.

குழந்தையுடன் கொஞ்சிப் பேசி குதுகலம் கொள்வோம். நதி, கடல் கரைகளிலே அலையோடு அன்பாய் உறவாடி மகிழ்வு கொண்டிடுவோம். தூய்மையான மனதுடன் சாதாரணமாக நறுமணங்களையும் காட்சிகளையும் உணர்ந்திடுவோம். பிறருடன் அன்புப் பாராட்டி, அவர்களையும் இணைத்துக் கொண்டு இன்பம் காண்போம். பல தூண்டல்களையும் கடந்து மெதுவாக இயற்கையின் எழிலை ரசித்திடுவோம். அழகான இந்த உலகத்தைக் கண்டு மகிழ்ச்சியடைவோம்.

நாள் முழுவதும் உள்ள அனைத்து அவசரங்களையும் விடுத்து நிதானமாக இயற்கையோடு இணைந்து உறவாடுவோம். மென்மையான மேகங்களுடன் மெல்ல உறவாடுவோம். ஆமையின் பெரும் வெற்றியை எண்ணி ஆனந்தம் கொள்வோம்.

ஒரு நிதான நடையில் சூழலை அனுபவிப்போம். நம்மை சுற்றி நடக்கும் அனைத்தையும் உற்றுநோக்கி, மகிழ்ச்சி அடைந்திடுவோம். தென்றலோடு நடக்கவும் மேகத்தோடு மிதக்கவும் முயற்சி செய்திடுவோம். ஒரு கணம் அசையாமல் நின்று மரம், செடி, அதில் பூத்து குலுங்கும் பூக்கள், பூக்களின் தேனுக்காக அதில் மயங்கி கிடக்கும் வண்டுகளின் வண்ணங்களை, கண்டு மெய்நிகர் இன்பம் காணுவோம்.

**இன்று சர்வதேச 'சாண்டரிங்' தினம்**

# நடவடிக்கை எடுக்குமா தமிழக அரசு?

பணத்தின் மதிப்பு குறையும்போழுது அத்தியாவசிய பொருட்களின் விலை உயரும் என்பது பொருளாதார விதி. அத்தியாவசிய பொருட்களின் விலை என்பது உற்பத்தி, விளைச்சல், தேவை, போக்குவரத்து, காலம் என பல்வேறு காரணிகளை சேர்ந்தது. இன்றைய காலத்தில் ஏற்படும் விலை மாற்றறங்களுக்கு முக்கிய காரணமாக உள்ளது பெட்ரோல், டீசல் விலைதான். மேலும், பெட்ரோல், டீசலுக்கு அதிகம் வரி விதிப்பது மாநில அரசுகள்தானே தவிர மத்திய அரசு அல்ல என்பதும் அனைவருக்கும் தெரிந்ததுதான்.

**பணவீக்கம்:**

தேசிய புள்ளியியல் துறை அண்மையில் அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வு தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளது. அதில் ரிசர்வ் வங்கி நிர்ணயித்த குறியீட்டு அளவையும் கடந்து மொத்த விற்பனை விலை 12.94 சதவீதமும், அத்தியாவசிய பொருட்களின் சில்லறை விற்பனை விலை உயர்வு 6.3 சதவீதமும் கடந்த 6 மாதங்களில் அதிகரித்திருக்கிறது. இதில் பெட்ரோல், டீசல் விலை 37.61 சதவீதம், உணவு பொருட்களின் விலை 6.3 சதவீதம், உளுந்து, துவரை உள்ளிட்ட பருப்பு வகைகளின் விலை 9.39 சதவீதம், சமையல் எண்ணெய் 30 சதவீதம் வெங்காயம் 23.24 சதவீதம் அதிகரித்துள்ளது.

**உண்மை நிலவரம்:**

இந்த விலை உயர்வு கிராமப்புறங்களில் 6.5 சதவீதமாகவும், நகர்ப்புறங்களில் 6 சதவீதமாகவும் காணப்படுகிறது. கடந்த 6 மாதங்களில் இல்லாத அளவிற்கு, ஏப்ரல், மே மாதங்களில் மட்டும் இந்த பொருட்களின் விலை மிக அதிகபட்சமாக 4.2 சதவீதம் உயர்வு கண்டுள்ளது. புள்ளியியல் துறையின் தகவல்களில்படி இது 6.5 சதவீதம் என்று கூறப்பட்டாலும் நடைமுறையில் பொருட்களின் விலையும் 10 முதல் 20 சதவீதம் வரை உயர்ந்துள்ளது.

**கள எதார்த்தம்:**

இதற்கு முக்கியக் காரணமாக கொரோனாவும் அதனை கட்டுப்படுத்தப்பட்ட ஊரடங்கும் உள்ளது என்பதை மறுக்க முடியாது. இதனால் சரக்குகள் கடந்த ஒன்றரை மாதங்களுக்கும் மேலாக பெருமளவில் தேக்கம் அடைந்துள்ளது. மேலும், கொரோனாவால் தமிழகத்தில் பல வணிக நிறுவனங்கள், சிறு குறு தொழில்கள், கடைகள், மழலையர் பள்ளிகள் அடியோடு மூடப்பட்டுவிட்டன. இதனால் 40 லட்சத்துக்கும் மேற்பட்டோர் நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலை வாய்ப்பை இழந்துள்ளனர். பல தனியார் நிறுவனங்கள் தங்களது ஊழியர்களின் சம்பளத்தை கணிசமாக குறைத்து விட்டன. பலரின் வேலையும் பறிபோய்விட்டது, வருமானமும் குறைந்துவிட்டது ஒருபுறம் என்றால் மறுபுறம் மருத்துவ செலவு, ஆன்லைன் கல்வி என செலவுகள் அதிகரித்துவிட்டன.

### இதுமட்டுமா?

அத்தியாவசிய பொருட்களின் விலை ஏற்றம் மட்டுமல்ல, கட்டுமானப் பொருட்களின் விலையும் விண்ணை முட்டுகிறது. இதனால் கட்டுமானத் தொழில் ஸ்தம்பிக்கும். அதனை நம்பியுள்ள எலெக்ட்ரிக், பிளம்பிங்க், பெயிண்ட், டைல்ஸ் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான தொழில்களும் அதனை நம்பியுள்ள லட்சக்கணகான தொழிலாளர்களின் நிலையும் கேள்விக்குறியாகும். இதனை சரி செய்ய தமிழக அரசு என்ன செய்யப்போகிறது?

### யார் கடமை?

எதற்கெடுத்தாலும் மத்திய அரசை குறை கூறி தப்பித்துக் கொள்லலாம் என தமிழக அரசு எண்ணக்கூடாது. அரசு கொடுக்கும் கொரோனா கால நிவாரண நிதியான 4,000 ரூபாயும், 14 வித பொருட்களும் அதிக பட்சம் 10 நாட்கள் தாக்குப் பிடிக்கலாம். அதன் பிறகு!? தமிழகத்தில் அத்தியாவசியப் பொருள் உட்பட அனைத்து பொருட்களின் விலையையும் கட்டுக்குள் கொண்டுவர வேண்டியது மாநில அரசின் கடமை.

### அரசு என்ன செய்யலாம்?

டாஸ்மாக் திறப்பு, மின் கட்டண உயர்வு, பேருந்து கட்டண உயர்வு, வரிகள் உயர்வு என வழக்கம்போல சிந்தித்து ஏற்கனவே சிரமப்படும் மக்களை மேலும் சிரமப்படுத்துவதைவிட, நாங்கள் ஆட்சிக்கு வந்தால் பெட்ரோல் டீசல் மீதான வரிகளை ஜி.எஸ்.டி வரம்புக்குள் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும். பெட்ரோல் லிட்டருக்கு 5 ரூபாய், டீசல் லிட்டருக்கு 4 ரூபாய் விலை குறைக்கப்படும். பெட்ரோல், டீசல் விலை நிரந்தரமாக கட்டுக்குள் வைக்கப்படும் என தேர்தல் வாக்குறுதி அளித்த தி.மு.க அதனை உடனடியாக செயல்படுத்த வேண்டிய காலம் வந்துவிட்டது என்றே தோன்றுகிறது.

மதிமுகன்

